செய்தி வெளியீடு எண்: 159 நாள் : 12-03-2016

## செய்தி வெளியீடு

## தேர்தல் விதிமீறல் – பறக்கும் படையினரால் ரூ.1 கோடியும், 1041 கிராம் தங்க நகைகளும் நிலையான கண்காணிப்புக் குழுவினால் ரூ.56 லட்சமும் கைப்பற்றப்பட்டது.

***********

தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலையொட்டி, உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லப்பட்ட பணம் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு உரிய விசாரணைக்குப் பிறகு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 10.03.2016அன்று முறையான ஆவணங்கள் இல்லாமல் நாகப்பட்டிணம் மாவட்டத்தில் எடுத்துச்செல்லப்பட்ட ரூ.5 லட்சமும், நீலகிரி மாவட்டத்தில் எடுத்துச்சென்ற ரூ.3.19 லட்சமும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எடுத்துச்சென்ற ரூ.7.8 லட்சமும், விருதுநகர் மாவட்டத்தில் கொண்டு சென்ற ரூ.3.45 லட்சமும், தேர்தல் பணியிலுள்ள பறக்கும் படையினரால் (Flying Squads) பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், திருச்சி மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இல்லாத 1041 கிராம் மதிப்புள்ள தங்க நகைகள், திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.61,500/- மற்றும் மதுரை மாவட்டத்தில் ரூ.10 லட்சம் என மொத்தம் ரூ.30,06,000/- ரொக்கம் 10.03.2016 கைப்பற்றப்பட்டன. இதுவரை பறக்கும் படையினரால் ரூ.1,17,02,660/- கோடியும், 1041 கிராம் தங்க நகைகளும் நிலையான கண்காணிப்புக் குழுவினால் ரூ.56 லட்சமும் கைப்பற்றப்பட்டது. 10.03.2016 வரையில் 51 வழக்குகள் தொடரப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளன.

மேலும், பெரியகுளத்தில் ஒரு திருமணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச்செல்லப்பட்ட அரசியல் தலைவர் படம், கட்சி சின்னம் பொறிக்கப்பட்ட தாம்பூலப்பைகள் பறிமுதல் செய்யப்பட்டன. தூத்துக்குடியில் அரசு அலுவலக சுவர்களில் அனுமதியின்றி விளம்பரம் செய்தவர்கள் மீதும் முறையான அனுமதி பெறாமல் கம்பம் பகுதியில் பிரச்சாரம் செய்தவர்கள் மீதும் வழக்கு பதியப்பட்டுள்ளது.

இதுபோன்று நிலையான கண்காணிப்புக்குழுவினர் (Static Surveillance Team) 10.03.2016 அன்று மேற்கொண்ட சோதனையில் ரூ.8,38,600/- ரொக்கமும், மதுவகைகளும் இதர பொருட்களும் கைப்பற்றப்பட்டது. கண்காணிப்பு குழுவினரின் சோதனையில் இதுவரை உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.56,32,445/- ரொக்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால், உரிய ஆவணங்களுடன் ரொக்கம் மற்றும் பரிசுபொருட்களை கொண்டு செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**